



# பட்டுவளர்ச்சி மற்றும் கைவினைப் பொருட்கள்

## மானியக் கோரிக்கை எண். 18

அறிவிப்புகள்

2018–2019

# பட்டுவளர்ச்சி மற்றும் கைவினைப் பொருட்கள்

மானியக் கோரிக்கை எண். 18

## அறிவிப்புகள்
## 2018–2019

**பா.பென்ஜமின்**

ஊரகத் தொழில்கள் துறை அமைச்சர்

# பட்டுவளர்ச்சித் துறை

## 1. உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல்

உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், 2018–2019–ஆம் ஆண்டில், ஒரு ஏக்கருக்கு 10,500/– ரூபாய் வீதம் 3,500 ஏக்கரில் மல்பெரி நடவு செய்திட **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 367.50 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

## 2. மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க உதவித்தொகை வழங்குதல்

நீர் ஆதாரங்களை சிக்கனமாகப் பயன்படுத்தி, நீர் நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில், 2018–2019–ஆம் ஆண்டில், 1,000 ஏக்கர் பரப்பிலான மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு உதவிடும் நோக்கில், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 250 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

## 3. பட்டுப்புழு வளர்ப்புக் குடில் கட்ட உதவியளித்தல்

சுகாதாரமான முறையில் பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொண்டு, பட்டுக்கூடு உற்பத்தி செய்யவும், பட்டுக்கூடுகள் தரத்தினை உயர்த்திடவும் தனித்தனி புழுவளர்ப்புக் குடில்கள் அமைப்பதற்கு ஒவ்வொன்றிற்கும், அதன் பரப்பிற்கேற்ப முறையே 63,000/– ரூபாய் அல்லது 82,500/– ரூபாய் அல்லது 87,500/– ரூபாய் வீதம் 2018–2019–ஆம் ஆண்டில், 800 பட்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 648.50 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

## 4. நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் / பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்குதல்

வெண்பட்டுப்புழு வளர்ப்பில் பட்டுக்கூடுகளின் தரம், உற்பத்தி திறன் அதிகரித்திட, 2018–2019–ஆம் ஆண்டில், 1,000 விவசாயிகளுக்கு நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்க **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 525 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

## 5. வெண்பட்டு முட்டை தொகுதிகளுக்கு போக்குவரத்து செலவினத் தொகை வழங்குதல்

விவசாயிகளிடையே வெண்பட்டு முட்டை வளர்ப்பினை ஊக்குவிக்கவும், மாநில அரசு உற்பத்தி செய்யும் வெண்பட்டு முட்டைத் தொகுதி விநியோகத்தினை அதிகரித்திடவும், 2018–2019–ஆம் ஆண்டில், 30 இலட்சம் வெண்பட்டு முட்டை தொகுதிகளுக்கு போக்குவரத்து செலவினத் தொகையாக **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 30 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

## 6. இருசுழற்சி இன வெண்பட்டு நூலுக்கு ஊக்குதவித் தொகை வழங்குதல்

வெண்பட்டு நூலின் தரம், உற்பத்தி அதிகரித்திட **2018–2019**–ஆம் ஆண்டில் தரமான வெண்பட்டு நூல் உற்பத்தி செய்யும் பட்டு நூற்பாளர்களுக்கு கிலோ ஒன்றுக்கு **100/–** ரூபாய் வீதம், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 20,000 கிலோகிராம் வெண்பட்டு நூலுக்கு **20** இலட்சம் ரூபாய் ஊக்குதவித் தொகை வழங்கப்படும்.

## 7. சிறந்த பட்டு விவசாயிகளுக்கு ரொக்கப் பரிசு வழங்குதல்

2018–2019–ஆம் ஆண்டில் வெண்பட்டுக் கூடுகள் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் வகையில் நவீன தொழில்நுட்பங்களை கடைபிடித்து, 100 பட்டு முட்டைத்தொகுதிகளுக்கு 80 கிலோகிராம் மற்றும் அதற்கு மேல் உற்பத்தி செய்யும் விவசாயிகளில், மாவட்ட அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே 25,000/– ரூபாய், 20,000/– ரூபாய், 15,000/– ரூபாய் பரிசு வழங்கவும் மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே 1,00,000/– ரூபாய், 75,000/– ரூபாய், 50,000/– ரூபாய் பரிசு வழங்கவும் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** பரிசுத் தொகையாக 20.85 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

## 8. அரசு விதைப் பண்ணைகளை வலுப்படுத்த உதவியளித்தல்

வர்த்தக ரீதியிலான பட்டு முட்டைகள் உற்பத்தி செய்ய ஆதார விதைப்பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்யும் ஐந்து ஆதார விதைப் பண்ணைகளை வலுப்படுத்த 2018–2019–ஆம் ஆண்டில், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 25 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

## 1. நகர்புறக் கண்காட்சித் திடல் பராமரிப்பிற்கு உதவியளித்தல்

மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மற்றும் மாமல்லபுரம் ஆகிய இரு இடங்களில் நகர்புறக் கண்காட்சித் திடல்கள் அமைக்கப்பட்டன. இந்நகர் புறக் கண்காட்சித் திடல்களை பராமரிப்பு செய்வதற்காக தொகை ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இவற்றை பராமரிக்க ஆண்டுத்தோறும் ஒரு நகர்புறக் கண்காட்சித் திடலுக்கு 20 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 2018–2019–ஆம் ஆண்டு முதல் இரு நகர்புறக் கண்காட்சித் திடல்களை பராமரிக்க 40 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

## 2. கற்சிற்பங்களுக்கு புதிய உற்பத்தி நிலையங்கள் அமைக்க உதவியளித்தல்

தற்போது மாமல்லபுரத்தில் இயங்கி வரும் கற்சிற்பங்களுக்கான உற்பத்தி நிலையத்தில் போதுமான இடவசதி இல்லாத காரணத்தினால், பொதுப்பயன்பாட்டு மையங்களுடன் இணைந்து செயல்படத்தக்க வகையில் 75 இலட்சம் ரூபாய் செலவில் கற்சிற்பங்களுக்கான ஒரு புதிய உற்பத்தி நிலையத்தை ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் நிறுவுவதற்கு **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** 75 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

## 3. மலேசியாவில் கண்காட்சி நடத்த நிதியுதவி அளித்தல்

மலேசியாவில் வசிக்கும் தமிழ் மக்கள் பயன்பெறும் வகையிலும், தமிழ்நாட்டின் கைவினைப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும் வகையிலும், பூம்புகார் நிறுவனம் இந்திய வர்த்தக மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து 2018–2019–ஆம் ஆண்டில் மலேசியாவில் ஒரு கண்காட்சியை நடத்த உள்ளது. **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** மலேசியாவில் ஒரு கண்காட்சி நடத்த தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்திற்கு 25 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

**பா.பென்ஜமின்**

ஊரகத் தொழில்கள் துறை அமைச்சர்

தமிழகமே எனது குடும்பம்;
தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள்;
தமிழக மக்களின் நலனே என் நலன்!

– மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்